# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 73 | 4 Pages | 15.10.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 73 | 4 பக்கங்கள் | 15.10.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இஸ்ரேல் பிரதமர் பதவி விலக வலியுறுத்தி போராட்டம்




இஸ்ரேல், அக். 15

ஹமாஸ் படையால் பிணைகைதியாக பிடித்து வைக்கப்பட்டு இருக்கும் ஒருவரின் குடும்பத்தினர் இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்இல் உள்ள இஸ்ரேல் பாதுகாப்புதுறை அமைச்சகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிணை கைதிகளின் பெயர்கள் எழுதப்பட்ட பலகைகளுடன் வந்து அவர்களை மீட்கக் கோரி கண்டனக் குரல் எழுப்பினர். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

இதுதவிர, இரட்டை குடியுரிமை வைத்திருக்கும் பாலஸ்தீனியர்கள் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். இரட்டை குடியுரிமை பெற்ற பாலஸ்தீனியர்கள் காசாவை விட்டு வெளியேறலாம் என்று முதலில் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## யூதர்களுக்கு எதிரான சம்பவங்களை சகித்து கொள்ள முடியாது: ரிஷி சுனக்




பிரிட்டன், அக். 15

பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழிக்க போவதாக கூறி இஸ்ரேல் ராணுவ படை (IDF), பாலஸ்தீனத்தில் உள்ள காசா பகுதியில் தேடி தேடி ஹமாஸ் அமைப்பினரை வேட்டையாடி வருகிறது. வான்வழி குண்டு வீச்சு தாக்குதலை தொடர்ந்து தரைவழி தாக்குதலையும் இஸ்ரேல் தொடர இருக்கிறது.

உலகநாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் உட்பட பல மேற்கத்திய நாடுகள் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. ஆனால், அந்நாடுகளில் உள்ள சில அமைப்புகள் இஸ்ரேலின் நடவடிக்கைகளை கடுமையாகஎதிர்க்கின்றன. இஸ்ரேல்நாட்டைசேர்ந்தயூதர்கள்மீதுவிரும்பத்தகாத சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெறுகின்றன.

"இஸ்ரேலின் கடந்த வார தாக்குதலை அடுத்து, இங்கிலாந்தில் உள்ள யூதர்களுக்கு எதிராக 105 சம்பவங்கள் நடந்துள்ளது. இது கடந்த செப்டம்பர் 30லிருந்து அக்டோபர் 13 வரை நடந்த 75 சம்பவங்களை விட மிக அதிகம்" என்று லண்டன் பெருநகர காவல் துணை ஆணையர் லாரன்ஸ் டேலர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கவலை தெரிவித்த இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் கூறியதாவது:

கடந்த சில நாட்களாக யூதர்களுக்கு எதிரான சம்பவங்கள் இங்கு அதிகரிப்பது சகித்து கொள்ள கூடியது அல்ல. யூதர்களின் வழிபாட்டு தலங்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தேவைப்படும் பாதுகாப்பை அளிக்க அதிக நிதியுதவி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து வகுப்பினரும் அமைதியாக வாழ்வதை உறுதி செய்ய காவல்துறைக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அவையனைத்தும் செய்து தரப்படும். அமைதியை குலைக்கும் வகையில் நடந்து கொள்பவர்கள் மீது சட்டம் முழு பலத்துடன் பாயும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானை வீழ்த்திய இந்திய அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து



டெல்லி, அக். 15

உலகக் கோப்பை 2023 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்றைய போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின. அகமதாபாத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் பாகிஸ்தான் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்திய அணி அபாரமாக வெற்றிப்பெற்றது.

இந்நிலையில், இந்திய அணி வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது:

அகமதாபாத்தில் இன்று இந்திய அணி அனைத்து விதங்களிலும் சிறப்பான ஒரு வெற்றியை பதிவு செய்துள்ளது. இந்திய அணியின் வெற்றிக்கு பாராட்டுகள். இனி வரும் போட்டிகளுக்கும் வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 2024க்கு பிறகு பாஜக ஆட்சியில் இருக்காது: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, அக். 15

சென்னையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மகளிரணி நடத்தும் மகளிர் உரிமை மாநாடு தொடங்கியது. இதில், தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. முன்னிலை வகிக்கிறார்.

இந்த மாநாட்டில் "இந்தியா" கூட்டணியை சேர்ந்த முன்னணி தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். குறிப்பாக, இந்த மாநாட்டில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.



இந்நிலையில், மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:

இந்தியா கூட்டணியின் மகளிர் தலைமைகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். பாஜகவை முற்றிலுமாக வீழ்த்த வேண்டும்.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற எண்ணத்தில் பிரதமர் செயல்படுகிறார்.

உண்மையான அக்கறையுடன் மகளிர் இடஒதுக்கீடு மசோதா கொண்டு வரப்படவில்லை. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை உடனடியாக செயல்படுத்தி இருந்தால் பாராட்டி இருக்கலாம்.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

2024க்கு பிறகு பாஜகவின் ஆட்சி இருக்காது. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

சமூக நீதியை எந்த சூழ்நிலையிலும் விட்டு கொடுக்கக் கூடாது. இந்தியா கூட்டணி கொள்கை கூட்டணி. இந்தியா கூட்டணி வெற்றி பெறுவதன் மூலம் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்படும்.

இந்த மாதத்திற்கான மகளிர் உரிமை தொகை இன்றே வந்துவிடும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# விளையாட்டு வீரர்களுக்கு அரசு துறையில் வேலைவாய்ப்பு: 31ந் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், அக். 15

தமிழக அரசால் ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்ற வீரர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி சர்வதேச போட்டிகளில் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள்,

ஆசிய விளையாட்டு போட்டிகள், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுதோறும் நடத்தப்படும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுக்கு ஒருமுறை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட காமன்வெல்த் சாம்பியன் ஷிப் போட்டிகள், ஆசிய சாம்பியன் ஷிப் போட்டிகள், சர்வதேச பார்வையற்றோர் விளையாட்டு சங்கம், காது கேளாதோருக்கான சர்வசே விளையாட்டு குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலக விளையாட்டு மற்றும் காது கேளாதோர் விளையாட்டுகளில் வெற்றி பெற்றவர்கள், பங்கேற்றவர்கள் தற்போது விண்ணப்பிக்கலாம்.

இதில் தேசிய அளவிலான போட்டிகள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் தேசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், மாநில அளவிலான சாம்பியன் ஷிப் போட்டிகளான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் சீனியர் அளவிலான மாநில சாம்பியன் ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். மேற்கண்ட போட்டிகளில் 112018 அன்றோ அல்லது அதற்கு பிறகு பெற்ற சாதனைகள் தகுதியானதாக கருதப்படும். 40 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே பயன்பெற முடியும். தமிழ்நாட்டை சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு பெறுவதற்கான விண்ணப்பங்கள் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. வருகிற 31ந் தேதி மாலை 5 மணிக்குள் இணையதள முகவரி அல்லது சென்னைநேருவிளையாட்டரங்கில் இயங்கி வரும் தலைமை அலுவலகத்தில் நேரிலும் விண்ணப்பிக்கலாம்.

இந்த தகவலை திருப்பூர் மாவட்ட விளையாட்டு அதிகாரி ராஜகோபால் தெரிவித்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம் மங்களம் ஊராட்சிக்கு உட்பட்ட நீலி பகுதியில் உள்ள பெருமாள் கோயில் புரட்டாசி நான்காம் வார சனிக்கிழமை என்பதால் சிறப்பு அலங்காரபூஜை மற்றும் வழிபாடுகள் நடைபெற்று திரளான பக்தர்களுக்கு Dr மங்களம் மகேந்திரன் தலைமையில் அன்னதானம் வழங்கினார்கள்

## சிற்றாறு தண்ணீர் விளை நிலங்களுக்கு கிடைக்க கோரிக்கை

உடுமலை, அக்.15

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் தேவனுார்புதுார், ஆண்டியூர், வலையபாளையம், ராவணாபுரம், திருமூர்த்திநகர், பொன்னலாம்மன் சோலை உள்ளிட்ட 15க்கும் அதிகமான கிராமங்கள் உள்ளன. பாலாற்றின் இருகரையிலும், அமைந்துள்ள இப்பகுதியில், தற்போது கடும் வறட்சி நிலவுகிறது. தென்னை மரங்களை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: பி.ஏ.பி., பாசன திட்டத்தில், காண்டூர் கால்வாய் மற்றும் திருமூர்த்தி அணை கட்டப்படும் முன், மேற்குத்தொடர்ச்சி மலையில் இருந்து பல சிற்றாறுகள் சமவெளியை நோக்கி கரைபுரண்டு ஓடியது. இதனால், எங்கள் பகுதி வளமிக்கதாக இருந்தது. சிற்றாறுகளில் இருந்த நீரோட்டத்தால், நீர்மட்டம் குறையாமல் இருந்தது. காண்டூர் கால்வாய் கட்டப்பட்ட பிறகு, சிற்றாறுகளின் நீர்வரத்து, முழுமையாக தடைபட்டு, கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு சென்றுவிடுகிறது. இதனால், மலை அடிவாரத்திலுள்ள அனைத்து சிற்றாறுகளும் வறண்டு, நிலத்தடி நீர்மட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு எவ்வித பாசன திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. பல ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் தண்ணீரின்றி தரிசு நிலமாக காட்சியளிக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு, வேதனையுடன் தெரிவித்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பல கிராம விவசாயிகள், தற்போது ஒருங்கிணைந்து ஆலோசனை கூட்டங்கள் நடத்தி, அதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றி வருகின்றனர். அதில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தை ஒட்டிய பகுதிகளுக்கு, தனியாக பாசனதிட்டத்தை செயல்படுத்த வேண்டும். மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள சிற்றாறுகளில், இருந்து வரும் தண்ணீர் காண்டூர் கால்வாயை அடைகிறது. அந்த தண்ணீரை அருகிலுள்ள விளை நிலங்களுக்கு செல்ல வழிவகை செய்ய வேண்டும். பாலாற்றின் குறுக்கே திருமூர்த்தி அணை கட்டிய பிறகு இயற்கையான முறையில் கிடைக்கும் தண்ணீர் தடைபட்டுள்ளது. அந்த தண்ணீர் மீண்டும் கிடைக்க, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபடுவது என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.



கலைஞரின் நேர்முக உதவியாளர் (பொது) விஜயராஜ் தலைமையில் கலெக்டர் அலுவலர் பெருந்திட்ட வளாகத்தில் சர்வதேச பேரிடர் இன்னல் குறைப்பு தினத்தை முன்னிட்டு பேரிடர் காலங்களில் பாதுகாத்து கொள்வதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தீயணைப்புத் துறையினரால் அலுவலர்கள் மற்றும் பொது மக்களுக்கு மாதிரி பயிற்சி நடைபெற்றது.

# காவிரி நீர் விவகாரம்: பா.ஜ.க தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்த போராட்டம் ரத்து



சென்னை, அக். 15

காவிரி நீர் விவகாரம் தொடர்பாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்த போராட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக பாஜக மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

காவிரி விவகாரம் தொடர்பாக வரும் 16ம் தேதி உண்ணாவிரத போராட்டம் நடத்தப்பட உள்ளதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்தார்.

இந்நிலையில், போராட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. காவிரியில் குறைந்த அளவு தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால், போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

# சிவராத்திரி திருவிழாவை முன்னிட்டு சிவன்மலையில் தங்கத்தேர் புறப்பாடு 10 நாட்களுக்கு நிறுத்தம்

காங்கயம், அக். 15

காங்கயம் அருகே சிவன்மலையில் பிரசித்தி பெற்ற முருகன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் சிறப்பு முருகப் பெருமான் அருள்பாலித்து வருகிறார். இந்த கோவிலின் தனிச்சிறப்பாக உத்தரவு பெட்டி என்று ஒன்று உள்ளது. அந்த பெட்டிக்குள் எந்த பொருள் வைக்க வேண்டும் என பக்தர்கள் கனவில் வந்து முருகப் பெருமானே கட்டளையிடுவதாக கூறுகின்றனர்.

அந்த பொருள் சமுதாயத்தில் ஒருவிததாக்கத்தை ஏற்படுத்துவதாக பக்தர்கள் தெரிவிக்கின்றனர். இக்கோவிலில் கடவுள் முருகன் சுப்பிரமணிய சுவாமியாக எழுந்தருளி இருக்கிறார்.

இந்த கோவிலில் ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் இறுதியில் நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு 10 நாட்களுக்கு கோவிலின் தங்கரத புறப்பாடு நிறுத்தப்படும்.

அதே போல் இந்த வருடமும் வரும் 15ந் தேதி முதல் 24ந் தேதி வரை 10 நாட்களுக்கு தங்கத்தேரானது நிறுத்தப்படும் என இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சிவன்மலை முருகன் கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

பயன்படுத்திய எண்ணெயை ஆர்.யு.சி.ஓ. திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் வழங்க வேண்டும்.

# பாலப்பம்பட்டி பகுதியில் நாளை மின்தடை ஏற்படும் பகுதிகள்

உடுமலை, அக். 15

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக உடுமலை இயக்குதலும் பேணுதலும் செயற்பொறியாளர் த.மூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

பாலப்பம்பட்டி துணை மின் நிலைய பகுதியில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் நாளை (திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின்வினியோகம் தடை செய்யப்படுகிறது.

அது சமயம் உடுமலை காந்திநகர், அண்ணா குடியிருப்பு, நேருவீதி, நகராட்சி அலுவலகம், பார்க், ரெயில் நிலையம், போலீஸ் குடியிருப்பு, சந்தை, எஸ்.வி. புரம், பாலப்பம்பட்டி, மைவாடி, கண்ணம்மநாயக்கனூர், குரல்குட்டை, மடத்தூர், மலையாண்டி பட்டினம், மருள்பட்டி, உரல்பட்டி, சாளரப்பட்டி, பாப்பான்குளம், சாமராய பட்டி, பெருமாள்புதூர், குமரலிங்கம், கொழுமம், ருத்ராபாளையம் மற்றும் வீரசோழபுரம் ஆகிய பகுதியில் மின்வினியோகம் இருக்காது.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.



அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டம் அமராவதி அணையிலிருந்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

# பண்டிகை கால பலகாரங்கள் தயாரிப்பவர்கள் உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டும்: மாவட்ட கலெக்டர் உத்தரவு



திருப்பூர், அக். 15

திருப்பூர் மாவட்டத்தில் ஆயுதபூஜை, தீபாவளி, கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு இனிப்பு, காரவகை பலகாரங்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் கலெக்டர் கிறிஸ்துராஜ் அறிவுரை வழங்கி கூறியிருப்பதாவது:

பண்டிகை காலங்களில் விதவிதமான இனிப்பு பலகாரங்கள், காரவகைகள் மற்றும் கேக் போன்ற பேக்கரி உணவு பொருட்களை மக்கள் விரும்பி வாங்குவதும், சொந்தபந்தங்களுக்கு அன்பளிப்பாக கொடுப்பதும் நடந்து வருகிறது. தீபாவளி பண்டிகை காரணமான இனிப்பு மற்றும் கார வகைகளுக்கு சீட்டு நடத்துபவர்கள் உள்பட அனைத்து தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் உணவு பாதுகாப்பு துறையில் பதிவு செய்து உரிமம் பெற்று பொதுமக்களுக்கு வினியோகம் செய்வது கட்டாயம்.

இனிப்பு கார வகைகள் மற்றும் பேக்கரி பொருட்கள் தயாரிப்பவர்கள் தரமானமூலப்பொருட்களை கொண்டு சுகாதாரமான முறையில் தயாரித்து பாதுகாப்பான உணவு பொருட்களை மக்களுக்கு வழங்க வேண்டும். உணவு தயாரிப்பில் கலப்படமான பொருட்களையோ, அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமான நிறமிகளை உபயோகிக்கக்கூடாது. மேலும் ஒருமுறை பயன்படுத்திய சமையல் எண்ணெயை மறுபடியும் சூடுபடுத்தி உணவு தயாரிக்கக்கூடாது. பயன்படுத்திய எண்ணெயை ஆர்.யு.சி.ஓ. திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் வழங்க வேண்டும்.

பேக்கிங் செய்யப்பட்ட உணவுப்பொருட்களுக்கு விவரம் சீட்டு இடும் போது அதில் தயாரிப்பாளரின் முழுமுகவரி, உணவுப்பொருட்களின்பெயர், தயாரிப்பு, பேக்கிங் செய்யப்பட்ட தேதி, காலாவதியாகும் காலம், சைவ மற்றும் அசைவ குறியீடு ஆகியவற்றை அவசியம் குறிப்பிட வேண்டும்.

உணவுப்பொருட்களை ஈக்கள், பூச்சிகள் மற்றும் கிருமி தொற்று இல்லாத சுகாதாரமான சூழலில் வைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டும். பண்டிகை காலத்தில் மட்டும் பலகாரங்கள் தயாரிப்பவர்கள் உள்பட அனைத்து தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களும் உடனடியாக உரிமம் அல்லது பதிவு சான்று பெற்றுக்கொள்ள வேண்டும். பொதுமக்களும் பண்டிகை காலங்களில் பலகாரங்கள் வாங்கும்போது உணவு பாதுகாப்புத்துறையில் பதிவு பெற்ற நிறுவனங்களில் மட்டும் வாங்க வேண்டும். உணவு தயாரிப்பு விவர சீட்டு இருந்தால் மட்டுமே வாங்க வேண்டும். உணவு தொடர்பான புகார்களை 94440 42322 என்ற வாட்ஸ்அப் எண்ணில் புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம்: தளி பேரூராட்சியில் புதிய திட்டப்பணிகள்: அமைச்சர் தொடங்கி வைத்தார்



குடிமங்கலம், அக். 15

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் தளி பேரூராட்சியில் ரூ.2 கோடியே 17 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, முடிவுற்ற பணியினை திறந்து வைத்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன் தலைமை தாங்கினார்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேசியதாவது:

தமிழக முதல்அமைச்சர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்காக பங்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தேர்தல் வாக்குறுதிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.1.000 என்கிற மகத்தான திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி உள்ளிட்ட பலவற்றை செயல்படுத்தி வருகிறார். மகளிர் சுயஉதவி குழு கடன்கள், நகைக் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் போன்ற எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அனிக்கடவு ஊராட்சி, நால்ரோட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் பயணிகள் நிழற்குடை, ரூ.6½ லட்சத்தில் சுகாதார வளாகம் மற்றும் ரூ.10.90 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். புக்குளம் ஊராட்சியில் ரூ.23½ லட்சத்தில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தை திறந்து வைத்தார்.

தளி பேரூராட்சியில் நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.82.20லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி மற்றும் மாநில நிதிக்குழுதிட்டத்தின் கீழ் ரூ.87லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்தும் என மொத்தம் ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் திட்டபணிகளை துவக்கி மற்றும்முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர்இல.பத்மநாபன், வருவாய் கோட்டாட்சியர் ஜஸ்வந்த் கண்ணன், உடுமலை தாசில்தார் சுந்தரம், வடக்கு ஒன்றிய செயலாளர் கிரி, குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் சுகந்தி முரளி, குடிமங்கலம்வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் மகேந்திரன், செந்தில் கணேஷ் மாலா, தளி பேரூராட்சித்தலைவர் உதயகுமார், பேரூராட்சி செயல்அலுவலர்கல்பனா, குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழு துணை தலைவர் புஷ்பராஜ், குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கவிதா முருகானந்தம், புக்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் தெய்வாத்தாள், வடக்கு ஒன்றிய செயலாளர் கிரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அமைச்சர்சாமிநாதன்திருப்பூர்மாவட்டம்உடுமலைப்பேட்டைவட்டம்பள்ளபாளையம்தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் கட்டப்பட்ட கூட்டுறவு எண்ணெய் ஆலையை திறந்து வைத்து பார்வையிட்டார்.

# மசாஜ் சென்டரில் விபசாரம் நடத்திய வாலிபர் கைது: 2 அழகிகள் மீட்பு

திருப்பூர், அக். 15

திருப்பூர் குமரன் ரோட்டில் ஒரு ஓட்டலில் உள்ள அறையில் மசாஜ் சென்டர் நடந்து வந்தது. இந்த சென்டரில் விபசாரம் நடப்பதாக திருப்பூர் வடக்கு போலீசுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. கொங்கு நகர் உதவி போலீஸ் கமிஷனர் அனில் குமார் தலைமையிலான தனிப்படை போலீசார் சம்பந்தப்பட்ட மசாஜ் சென்டரில் அதிரடி சோதனை நடத்தினார்கள். இதில் அந்த மசாஜ் சென்டரில் விபசாரம் நடப்பது உறுதி செய்யப்பட்டது.

அங்கிருந்து மும்பையைச் சேர்ந்த 30 வயது பெண், திருப்பூர்சேர்ந்த 20 வயது இளம்பெண் ஆகியோரை போலீசார் மீட்டு காப்பகத்தில் ஒப்படைத்தனர். மசாஜ்சென்டர்நடத்தி வந்த திருப்பூர் பி.என். ரோடு பகுதியை சேர்ந்த மோகன் (வயது 30) என்பவரை வடக்கு போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

# மடத்துக்குளத்தில் நெல் கொள்முதல் மையம் திறப்பு: விவசாயிகள் பயன்பெற வேண்டுகோள்



போடிப்பட்டி, அக். 15

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள மடத்துக்குளம்சுற்று வட்டாரபகுதிகளில் நடப்பு பருவத்தில் சுமார் 2,400 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் பெரும்பான்மையாக சோழமாதேவி, கடத்தூர், கணியூர், காரத்தொழுவு, அக்ரகாரம் கண்ணாடிப்புத்தூர் பகுதிகளில் சுமார் 1,600 ஏக்கர் நெல் பயிடப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் தற்போது அறுவடை தீவிரமாக நடைபெற்று வருவதால் உடனடியாக நெல் கொள்முதல் மையம் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன்படி மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டது. இதற்கான திறப்பு விழாவில் திருப்பூர் மண்டல மேலாளர் சின்னுசாமி கலந்து கொண்டு கொள்முதல் மையத்தை தொடங்கி வைத்தார். மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் தேவி முன்னிலை வகித்தார். நெல் கொள்முதல் குறித்து அதிகாரிகள் கூறியதாவது:'தமிழக அரசாணையின் படி சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.2,203 மற்றும் ஊக்கத்தொகை ரூ.107 சேர்த்து மொத்தம் ரூ.2,310க்கு கொள்முதல் செய்யப்படும். இது கடந்த ஆண்டு கொள்முதல் விலையை விட ரூ.150 அதிகம் ஆகும். பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.2,183 மற்றும் ஊக்கத்தொகை ரூ.82 சேர்த்து மொத்தம் ரூ.2,265க்கு கொள்முதல் செய்யப்படும். இதுவும் கடந்த ஆண்டை விட ரூ. 150 அதிகம் ஆகும். கொள்முதல் செய்யப்படும் நெல்லில் சேதமடைந்த முளை விட்ட மற்றும் பூச்சி துளைத்த தானியங்கள் 4 சதவீதம் மற்றும் ஈரப்பதம் 17 சதவீதத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும் குறிப்பிடத்தக்க தர நிர்ணயங்களின் அடிப்படையில் நெல் கொள்முதல் செய்யப்படும். நெல் கொள்முதல் மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை செயல்படும். 1.30 மணி முதல் 2.30 மணி வரை உணவு இடைவேளையாகும். எனவே விவசாயிகள் பட்டா, சிட்டா, அடங்கல், உரிமைச் சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன் அரசின் நேரடி நெல் கொள்முதல் மையத்தில் விற்பனை செய்து பயனடையலாம். ஈரப்பதம் 17 சதவீதம் வரை உள்ள தரமான நெல் எந்தவித பிடித்தமும் இல்லாமல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்படும்'என்று அவர்கள் கூறினர்.

# பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

உடுமலை, அக். 15

ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட உடுமலை வனச்சரகத்தின்அடர்ந்த வனப்பகுதியில் பஞ்சலிங்க அருவி உள்ளது. இந்த அருவிக்கு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உற்பத்தியாகின்ற ஆறுகள், ஓடைகள் நீர்வரத்தை அளித்து வருகிறது. அருவியில் குளித்து புத்துணர்வு பெறுவதற்காக வெளியூர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் திருமூர்த்தி மலைக்கு வந்த வண்ணம் உள்ளனர். இந்த சூழலில் நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை.இதன் காரணமாக அருவிக்கு நீர்வரத்தை அளிக்கக்கூடிய ஆறுகள் ஓடைகள் வறண்டு விட்டது. இதனால் அருவியும் நீர்வரத்து இல்லாமல் வெறுமனே காட்சி அளித்து வந்தது.சுற்றுலா பயணிகள், பக்தர்கள் அருவியில் குளிக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்து வந்தனர்.இந்த நிலையில் அருவியின் நீராதாரங்களான குழிப்பட்டி, குருமலை பகுதியில் திடீரென மழை பெய்தது.இதன் காரணமாக பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து ஏற்பட்டது.இதனால் திருமூர்த்திமலைக்கு வருகை தந்து சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அத்துடன் உற்சாகத்தோடு அருவிக்கு சென்று குளித்து மகிழ்ந்தனர். மேலும் குடும்பத்தோடு அருவிப்பகுதியில் புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தனர்.அதைத்தொடர்ந்து அடிவார பகுதிக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் மும்மூர்த்திகளை சாமி தரிசனம் செய்துவிட்டு திரும்பி சென்றனர்.நீண்ட நாட்களுக்குப் பிறகு அருவியில் நீர்வரத்து ஏற்பட்டு உள்ளதால் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு உயர்ந்து உள்ளது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# திருப்பதி பிரம்மோற்சவ திருவிழாவுக்கு 5 டன் பூ மாலைகள் அனுப்பி வைப்பு



திருச்செங்கோடு, அக்.15

திருப்பதியில் ஆண்டுதோறும் நடக்கும் பிரம்மோற்சவத் திருவிழாவுக்குதிருச்செங்கோட்டில் இருந்து பூமாலைகள் அனுப்பபட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டு பிரமோற்சவ விழா நாளை தொடங்குகிறது. இதற்காக இந்த ஆண்டு நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நாடார் திருமண மண்டபத்தில் சுமார் 5 டன் எடையுள்ள மணம் உள்ள மலர்களை மாலைகளாக தொடுக்கும் விழா நடந்தது. திருச்செங்கோடு சுற்றுபகுதிகளை சேர்ந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் வழங்கிய சம்பங்கி, மஞ்சள், சிவப்பு, சாமந்தி பூக்கள், மரிக்கொழுந்து உள்ளிட்ட சுமார் 5 டன் எடையுள்ள பல வண்ண பூக்களை திருச்செங்கோடு, சேலம், கொங்கணாபுரம், ராசிபுரம், ஆத்தூர் பகுதிகளை சேர்ந்த சுமார்400க்கும்மேற்பட்ட பெண்கள் மாலைகளாக தொடுத்தனர்.

இது குறித்து கொங்கணா புரத்தை சேர்ந்த திருமலை திருப்பதி ஸ்ரீமன் நாராயணா நித்ய புஷ்ப கைங்கர்ய சபா டிரஸ்ட் நிர்வாகிகள் சுகந்தி, கனகராஜ் ஆகியோர் கூறியதாவது:

கொங்கணாபுரத்தை சேர்ந்த திருமலை திருப்பதி ஸ்ரீமன் நாராயணா நித்ய புஷ்ப கைங்கர்ய சபா டிரஸ்ட் சார்பில் ரதசப்தமி, வைகுண்ட ஏகாதசி, உகாதி, பிரம்மோற்சவத் திருவிழா ஆகியவற்றுக்கு பூமாலைகள் வருடம்தோறும் தொடுத்து அனுப்பி வருகின்றோம். இறைப்பணியில் அதிக ஆர்வமுள்ள பக்தர்கள் மாலை தொடுக்கும் பணியை செய்தனர்.

மேலும் மாலைகளோடு கரும்பு, தென்னம்பாளை, தென்னங் குருத்து, இளநீர், பாக்கு குழைகள், மாங்கொத்துகள் சுமார் ரூ.2 1/2 லட்சம் மதிப்புள்ள 10 ஆயிரம் ரோஜா செடிகள் ஆகியவற்றையும் சிறப்பு பூஜைகள் செய்து அனைத்தையும் 3 லாரிகள் மூலம் திருமலைக்கு அனுப்பி உள்ளோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தக்காளி சாகுபடி செய்வது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரி விளக்கம்

போடிப்பட்டி , அக். 15

மடத்துக்குளம் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மடத்துக்குளம் வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்களான காய்கறிகள் பெரும்பாலான விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக தக்காளி சாகுபடி அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நல்ல வடிகால் வசதியான இருமண்பாட்டு நிலம் தக்காளி சாகுபடி செய்வதற்கு உகந்த நிலமாகும். விதைகள் மிக சிறியதாக இருப்பதால் நாற்று விட்டு நடவு செய்யப்படுகிறது. ஒரு ஏக்கரில் நாற்று விட்டு நடவு செய்ய 160 கிராம் விதைகள் தேவைப்படும். விவசாயிகளே தங்கள் சொந்த நிலங்களில் மேட்டுப்பாத்தி அமைத்து விதைகளை நடவு செய்து நாற்றுக்களை தயார் செய்யலாம். ஆனால் பெரும்பாலான விவசாயிகள் நாற்றுப் பண்ணைகளில் குழித்தட்டு நாற்றுகள் வாங்கி நடவு செய்து வருகின்றனர். அவ்வாறு வாங்கும் போது தரமான நாற்றுகளாக விவசாயிகள் தேர்வு செய்து வாங்க வேண்டும். நடவு செய்யும் நிலத்தை 3 அல்லது 4 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 8 முதல் 10 டன் மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இட்டு மண்ணுடன்கலக்க செய்ய வேண்டும். பின்பு 60 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைத்து வசதியான அளவில் வாய்க்கால் வரப்புகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நடவு செய்த 3ம் நாள் உயிர் தண்ணீர் விட வேண்டும். அதனை தொடர்ந்து 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் போதும்.நடவு செய்த 30 முதல் 35 நாட்களில் களையெடுத்து, பின் மேலுரம் இட்டு மண் அணைக்க வேண்டும். தேவைக்கேற்ப இயற்கை அல்லது செயற்கை உரங்களை பயன்படுத்தவும். தகுந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். தக்காளி செடியில் இருக்கும் போதே செங்காய் பதத்தில் பறிக்கப்பட்டு கூடைகளில் அடுக்கப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகிறது. உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்ய நன்கு பழுத்த பின் அறுவடை செய்யலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கொள்ளையடிக்க வந்த வீட்டில் மதுகுடித்து விட்டு படுத்து தூங்கிய கொள்ளையர்கள்

கோவை, அக். 15

கோவை வடவள்ளி அருகே உள்ள கல்வீரம்பாளையத்தை சேர்ந்தவர் பிரசாத்(வயது55).

இவர் கடந்த 4ந்தேதி தனது வீட்டை பூட்டிவிட்டு குடும்பத்துடன் மத்தியபிரதேச மாநிலத்துக்கு சுற்றுலா சென்றார்.

அப்போது பிரசாத் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து மர்மநபர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்கள் அறையில் இருந்த பீரோவை திறந்து அதில் இருந்த கேமிரா, வெள்ளி நாணயம், தங்க நாணயம், வைர கம்மல், மூக்குத்தி, வெள்ளி டம்ளர் உள்பட ரூ.15 ஆயிரம் மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித்தனர். பின்னர் கொள்ளையர்கள் அந்த பகுதியில் உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்று விஸ்கி, ஒயின் ஆகியவற்றை வாங்கி விட்டு மீண்டும் பிரசாத்தின் வீட்டிற்கு சென்றனர். அங்கு வைத்து அவர்கள் மது குடித்தனர். மது குடிக்கும் போது சாப்பிடுவதற்காக வீட்டில் உள்ள பிரிட்ஜை திறந்து அதில் இருந்த உணவு பொருட்களை எடுத்து சாப்பிட்டு மது குடித்தனர்.

பின்னர் போதையில் படுத்து தூங்கி விட்டு போதை தெளிந்ததும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களுடன் தப்பிச் சென்றனர்.

சுற்றுலா முடிந்ததும் வீட்டிற்கு திரும்பி வந்த பிரசாத் கதவு உடைக்கப்பட்டு திறந்து இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

உள்ளே சென்று பார்த்த போது பீரோவில் இருந்த பொருட்கள் கொள்ளை போயிருப்பது தெரிய வந்தது. மேலும் வீட்டில் கொள்ளையர் பயன்படுத்திய மதுபாட்டில் கிடப்பதை கண்டார். இது குறித்து அவர் வடவள்ளி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக போலீசார் சம்பவஇடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

இது குறித்து வடவள்ளி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# கடைக்காரருக்கு மொத்தமாக பருப்பு விற்பனை செய்த ரேஷன் கடை ஊழியர் சஸ்பெண்டு

திருப்பூர், அக். 15

திருப்பூர் 15வேலம்பாளையம் தொடக்க வேளாண்மைக்கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 59, வேலம்பாளையம் ரேசன் கடையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ரேசன் கார்டு இல்லாமல் சுமார் 20 கிலோ பருப்பை வாலிபர் ஒருவர் இருசக்கர வாகனத்தில் கொண்டு சென்ற போது அங்கிருந்த பொதுமக்கள் ரேசன்கார்டு இல்லாமல் இவ்வளவு பருப்பை எப்படி மொத்தமாக கொண்டு செல்கிறீர்கள் என அந்த வாலிபரை பார்த்து கேட்டனர்.

மேலும் கார்டுதாரர்கள் கேட்டால்பருப்புஇல்லை என திருப்பி அனுப்பி விட்டு கடைக்காரர்களுக்கு மொத்தமாக விற்பனை செய்கிறீர்களா என விற்பனையாளரிடம் இது குறித்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு விற்பனையாளர் பருப்பு இல்லை என்று சொல்பவர்கள் வரட்டும் , நான் பேசி கொள்கிறேன் என மெத்தனமாக பதில் அளிக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது.

இந்த நிலையில் 15வேலம்பாளையம் ரேசன் கடையில், ரேசன் கார்டு இல்லாமல் விற்பனையாளர் ராமாத்தாள் மொத்தமாக பருப்பை விற்பனை செய்யும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது.

இதைத்தொடர்ந்து அவரை பணியிடை நீக்கம் செய்து கூட்டுறவு சார்பதிவாளர் செல்வி உத்தரவிட்டார்.

# டெல்டா மாவட்ட நீர்நிலைகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க குவிந்த பொதுமக்கள்



தஞ்சாவூர், அக். 15

ஆடி அமாவாசை, புரட்டாசி அமாவாசை, தை அமாவாசை ஆகிய 3 அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகும்.

இந்த நாட்களில் மூதாதையர்கள் பூமிக்கு வருவதாக ஐதீகம். இந்த சமயத்தில்அவர்களைவரவேற்று திதி, நீர்க்கடன் செய்ய வேண்டும். இதனால் அவர்களது ஆசி கிடைத்து குடும்பம் முன்னேறும். நாம் செய்த பாவங்கள் நீங்கும்.

நீர்நிலைகள் அருகே அமர்ந்து வேதமந்திரங்கள் சொல்லி திதி கொடுப்பது, மூதாதையர்கள் நினைவாக பிண்டம் செய்து உணவாக படைப்பது என்று செய்து வருகின்றனர். இந்த சடங்குகள் தஞ்சை மாவட்டம் திருவையாறு, நாகை மாவட்டம் வேதாரண்யம், கோடியக்கரை, மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் ஆகிய இடங்களில் சிறப்பாக நடைபெறும்.

அதன்படி, இன்று புரட்டாசி மகாளய அமாவாசை என்பதால் இன்று காலை முதலே தங்களது மூதாதையர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க திருவையாறில் உள்ள காவிரி புஷ்ய மண்டபத்தில் திரளான பொது மக்கள் வர தொடங்கினர். நேரம் செல்ல செல்ல கட்டுக்கடங்காத கூட்டம் காணப்பட்டது.

காவிரி ஆற்றில் பொது மக்கள் புனிதநீராடி மூதாதையர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். இதற்காக ஏராளமான புரோகிதர்கள் படித்துறைக்கு வந்திருந்தனர். இதனால் புஷ்ய மண்டபத்தில் மக்கள் கூட்டம் அலைமோதியது. இன்று ஆயிரக்கணக்கானோர் தர்ப்பணம் கொடுத்து காவிரியில் புனித நீராடினர்.

இதேபோல், தஞ்சாவூர் கல்லணை கால்வாய் படித்துறை, கும்பகோணம் காவிரி ஆற்றின் பகவத் படித்துறை, டபீர் படித்துறை, மேலக்காவேரி படித்துறை, அரசலாற்றங்கரை உள்ளிட்ட நீர் நிலைகளில் ஏராளமான பொதுமக்கள் இன்று காலையில் இருந்து குவியத்தொடங்கினர். அங்கு அவர்கள் தங்களது முன்னோர்களின் நினைவாக தர்ப்பணம் கொடுத்து வழிபாடு செய்தனர்.

# வடக்கு குறுமைய அளவிலான விளையாட்டுப்போட்டி: ஜெய் சாரதா பள்ளி மாணவர்கள் சாதனை



சென்னை, அக்.15

சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மருத்துவ சேவை மற்றும் ஆய்வு மையம் கர்மா பீக் பிரைய்ன். இந்த சேவை மையம் ஆட்டிசம் மற்றும் மாற்று திறன் படைத்த சிறப்பு குழந்தைகளை கண்காணித்து சிகிச்சை அளித்து வருகிறது. தற்போது இந்த மையம், மூளை பகுதியில் ஏற்படும் பாதிப்புகளை கண்டறிவதற்கு நவீன கருவி மற்றும் சிகிச்சை முறையை கண்டுபிடித்திருப்பதாக தெரிவித்திருக்கிறது.

இந்நிறுவனம் தற்போது புதிதாக கண்டுபிடித்திருக்கும் பெர்சனலைஸ்ட் ட்ரான்ஸ்க்ரானியல் மேக்னடிக் ஸ்டிமுலேஷன் தெரபி எனப்படும் புதிய சிகிச்சை முறையை மருத்துவ நிபுணர்கள் குழு மற்றும் சுகாதாரத்துறை வல்லுனர்களுடன் இணைந்து இந்த சிகிச்சையை நிறுவனம் நோயாளிகளுக்கு வழங்கி வருகிறது. இந்தக் குழு மூளை வளர்ச்சியால் பாதிக்கப்பட்ட அல்லது மூளையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கண்டறிவதற்கு முன்னர் குவான்டிடேட்டிவ் எலக்ட்ரோ என்செலபோகிராம் எனும் கருவியை கண்டறிந்து, அதன் மூலமாக எந்த மாதிரியான சிகிச்சையை வழங்குவது என தீர்மானித்து அவர்களை மேம்படுத்துகிறது.

நம்முடைய மூளையின் ஆரோக்கியத்தை நியூரோ ரெஸ்டரேசன்மூலம் மேம்படுத்துவதிலும் இந்த குழுவினர் கவனம் செலுத்தி வருகிறார்கள். மேலும் மூளையின் ஆரோக்கியத்தை மேம்படுத்த தற்போது இவர்கள் கண்டறிந்திருக்கும் புதிய சிகிச்சை முறை வெகுவாக பலன் அளித்து வருகிறது. மேலும் இது நோயாளிகளின் வாழ்க்கையை மாற்றுவதற்கும், இந்த சிகிச்சையை வழங்குவதற்கு சுகாதார நிபுணர்களுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள்.

கர்மா பீக் பிரைய்ன் கண்டறிந்திருக்கும் தனித்துவமான சிகிச்சை முறை தற்போது வழங்கப்படும் சிகிச்சை முறைகளில் மேம்பட்டது. இதன் மூலம் நோய்க்கான அறிகுறிகளையும், நோய்க்கானக் காரணங்களையும் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கவனம் சார்ந்த பிரச்சனைகள், மன அழுத்தம், மனப்பதட்டம், மன இறுக்கம், நடத்தை பிரச்சனைகள், உறக்கமின்மை, ஒற்றைத் தலைவலி... உள்ளிட்ட ஏராளமானமூளைதொடர்பான நரம்பியல் பாதிப்புகளைதுல்லியமாக அவதானித்து, அதற்கான சிகிச்சைகளை தேர்வு செய்து, அதனை எளிய முறையில் வழங்கி நோயாளிகளுக்கு முழுமையான நிவாரணத்தை வழங்க இயலும்.

இந்த சிகிச்சை முறைப்படி நோயாளிகளின் மூளை பகுதியை இசிஜி அல்லது ஸ்டெதஸ்கோப் மூலம் கண்டறிவது போல்.. மூளை மேப்பிங் எனப்படும் முறையை எனும் கருவியை பயன்படுத்தி மூளையின் மின்னாற்றல், அதன் இயங்குதிறன் மற்றும் செயல்பாட்டை துல்லியமாக அளவிட இயலும். இது தொடர்பான உங்களுக்கு இலவச சேவை மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றை தெரிந்து கொள்ள எங்களுடைய contact@karmapeakbrain.com எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இந்த இலவச சேவைகளை பயன்படுத்திக் கொண்டு உங்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் மூளை மேப்பிங் செய்து உங்களுடைய மூளையின் செயல்பாடு, இயங்குத்திறன், மின்னாற்றல் உள்ளிட்ட விவரங்களை துல்லியமாக தெரிந்து கொள்ளலாம். இதன் மூலம் உங்களுடைய வாழ்க்கை தரத்தையும் நீங்கள் மேம்பட்ட தரத்திற்கு மாற்றி அமைத்துக் கொள்ள இயலும்.

# தமிழக மீனவர்கள் 16 பேர் சிறைபிடிப்பு



ராமேசுவரம், அக். 15

தமிழக மீனவர்கள் 16 பேரை இலங்கை கடற்படை சிறைபிடித்து உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 2 படகுகளுடன், மீன் பிடித்து கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் கச்சத்தீவுக்கும், தனுஷ்கோடிக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படை சிறைபிடித்துள்ளது.

எல்லை தாண்டி மீன் பிடிக்க வந்ததாக கூறி சிறைபிடித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# மின்சாரம் பாய்ந்து கேங்மேன் காயம்: உதவி மின் பொறியாளர் சஸ்பெண்டு

திருச்சி, அக். 15

திருச்சி தென்னூரில் உள்ள தலைமை மின்வாரிய பொறியாளர் அலுவலகத்தின் மலைக்கோட்டை பிரிவில் ராஜீவ் காந்தி என்பவர் கேங்மேனாக பணியாற்றி வருகிறார்.

இவர்இருதினங்களுக்கு முன்பு பணியில் ஈடுபட்ட போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் பாய்ந்து பலத்த காயம் அடைந்தார். பின்னர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மின் இணைப்பை துண்டிக்காமல் உரிய பாதுகாப்பு இல்லாமல் 110 கே.வி. மின் கம்பத்தில் ஏறி பணி செய்யுமாறு உயர் அதிகாரி வாய்மொழி உத்தரவிட்டதாகவும், மின்சாரம் உள்ள பகுதிகளில் அவர்களை பணியில் ஈடுபடுத்தக்கூடாது என்ற விதிக்கு புறம்பாக ராஜீவ் காந்தியை பணி செய்ய வைத்ததால்

இந்த விபத்து நடந்ததாக புகார் எழுந்தது. அதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவருக்கு உயரிய மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். விபத்துக்கு காரணமான அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மின்வாரிய தொழிற்சங்கங்கள் சார்பில் தென்னூர் மின்வாரிய தலைமை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

மேலும் திருச்சி மன்னார்புரத்தில் உள்ள மின்வாரிய பொறியாளர் அலுவலகம் முன்பும் காத்திருப்பு போராட்டம் நடத்தப்பட்டது. பின்னர் மின்வாரிய அதிகாரிகள், கேங்மேன்கள் தரப்பில் நடந்த பேச்சு வார்த்தையில் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட உதவி மின் பொறியாளர் ஆர். சரவணன் அதிரடியாக சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளார்.

# சேலம் கோரிமேட்டில் ரவுடி மண்டை உடைப்பு

சேலம், அக். 15

சேலம் கோரி மேடு பகுதியை சேர்ந்தவர் மணிகண்டன்என்றகிட்டாமணி (30), பிரபல ரவுடி, இவர் தற்போது கார் வைத்து வாடகைக்கு இயக்கி வருகிறார். இவரது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் மகாவிஷ்ணு. இவர் நேற்று மணிகண்டன் காரை வாடகைக்கு கேட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து மணிகண்டன்காருக்குடீசல்போட்டு தயாராக வைத்துள்ளார். ஆனால் மகாவிஷ்ணு , மணிகண்டன் காரை எடுக்காமல் வேறு நபரிடம் வாடகை காரை எடுத்து சென்றார். இதனால் ஆத்திரம் அடைந்த மணிகண்டன், மகாவிஷ்ணுவின் சகோதரியிடம் தகராறில் ஈடுபட்டதுடன் அவரை தாக்கினார். இது குறித்து மகாவிஷ்ணு தட்டி கேட்டார். இதில் அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. ஆத்திரம் அடைந்த மகாவிஷ்ணு, மணிகண்டன் தலையில் கம்பியால் சரமாரியாக தாக்கினார். இதில்படுகாயம்அடைந்த மணிகண்டன் உயிருக்கு ஆபத்தான நிலையில் சேலம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து அஸ்தம்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# 4 வருடத்திற்கு பிறகு அரசு போக்குவரத்து கழகத்திற்கு 1666 புதிய பஸ்கள் வாங்க முடிவு



சென்னை, அக். 15

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் 20 ஆயிரம் பஸ்கள் தினமும் இயக்கப்படுகின்றன. நகர மற்றும் புறநகர் பகுதிகளுக்கு இயக்கப்படும் இந்த பஸ்களை ஏழை, நடுத்தர மக்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த 4 வருடங்களுக்கு முன்பு தான் புதிய பஸ்கள் வாங்கப்பட்டன. கடந்த சில மாதங்களுக்கு முந்தைய பழைய பஸ்களை மறுசீரமைத்து பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் சென்னை மாநகர போக்குவரத்து கழகம் மற்றும் அரசு விரைவு போக்குவரத்து கழகங்கள் தவிர மற்ற 6 போக்குவரத்து கழகங்களுக்கு புதிய பஸ்கள் வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிற மாவட்டங்களில் இயக்கப்படும் பெரும்பாலான பஸ்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. மதுரை, திருநெல்வேலி போக்குவரத்து கழகங்களில் ஓடுகின்ற பஸ்கள் பெரும்பாலும் ஓட்டை உடைசலாகவே உள்ளது.

அதனால் 1666 புதிய பஸ்கள் வாங்குவதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் டெண்டர் இறுதி செய்துள்ளது.

நகரம் மற்றும் புறநகர் பகுதியில் பஸ் சேவையை மேம்படுத்தும் வகையில் கும்பகோணம் போக்குவரத்து கழகங்களுக்கு 367 பஸ்கள், மதுரை 350, விழுப்புரம் 344, கோவை 263, திருநெல்வேலி 242, சேலம் 84 பஸ்கள் வாங்குவதற்கு டெண்டர் விடப்படுகிறது.

மலைப் பகுதியில் இயக்குவதற்கு வசதியாக 16 சிறப்பு பஸ்கள் வாங்கப்படுகின்றன. கொரோனா தொற்று பரவலுக்கு பிறகு பஸ் போக்குவரத்து அதிகரித்து உள்ளது. பொதுமக்கள் வசதிக்காக கூடுதலாக பஸ்கள் வாங்கப்படுவதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

இதற்கான டெண்டர் அசோக் லேலண்ட் நிறுவனத்துக்கு கொடுக்கப்படுகிறது. பி.எஸ்.Vi என்ஜின் வகை புதிய பஸ்களில் பொருத்தப்படுகிறது. இதில் பயணிகளுக்கு கூடுதலாக பல்வேறு வசதிகள் இடம்பெறுகிறது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 15.10.2023



# நடிகை சமந்தா மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதி

சமந்தா மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக தகவல் பரவி வருகிறார்கள்.

நடிகை சமந்தா மயோசிடிஸ் என்ற தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு உள்ளார். இதற்காக ஏற்கனவே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். இதில் உடல்நிலை சற்று தேறிய நிலையில் மீண்டும் படப்பிடிப்புகளில் பங்கேற்று நடித்தார்.

சமீபத்தில் படப்பிடிப்பில் இருந்து கொஞ்சம் ஓய்வு எடுக்கப்போவதாக அறிவித்தார். அமெரிக்காசென்றுசிகிச்சைஎடுத்துக்கொள்ளமுடிவுசெய்துஇருப்பதாககூறப்பட்டது.

இந்த நிலையில் சமந்தா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவது போன்ற ஒரு புகைப்படத்தை வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். அதில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் பூஸ்டரின் பயன்கள் குறித்து சமந்தா வெளியிட்டுள்ள பதிவில், " இது வெள்ளை அணுக்கள் உற்பத்தியை அதிகரிக்கும். நோய் எதிர்ப்பு மண்டல செயலை மேம்படுத்தும், தசைகள், எலும்புகளை வலுவாக்கும், இதயத்தை சரியாக செயல்பட வைக்கும். வைரஸ்களை எதிர்த்து போராடும். நரம்பு வழி ஊட்டச்சத்து என்பது ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவதற்கான வழிமுறை'' என்று குறிப்பிட்டு உள்ளார்.

இதன் மூலம் சமந்தா மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாக தகவல் பரவி அவர் விரைவில்குணமடையரசிகர்கள்வாழ்த்துதெரிவித்து வருகிறார்கள்.



# கன்னட மொழியில் தனுஷ் படம்

தனுஷ் கேப்டன் மில்லர் படத்தில் நடித்து முடித்துள்ளார். தனுஷ் தோற்றம் ஏற்கனவே வெளியாகி படத்துக்கு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. தற்போது படப்பிடிப்பு முடிந்து தொழில் நுட்ப பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இந்த நிலையில் கேப்டன் மில்லர் படத்தை கன்னட மொழியிலும் டப்பிங் செய்து வெளியிட ஏற்பாடுகள் நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.இந்தபடத்தில்கன்னடசூப்பர்ஸ்டார்சிவராஜ்குமாரும் முக்கியகதாபாத்திரத்தில்நடித்துள்ளார்.எனவேகர்நாடகாவில் நேரடி தமிழ் படமாக இல்லாமல் கன்னட மொழியில் ரிலீஸ் செய்தால்சிவராஜ்குமார்ரசிகர்கள்மத்தியில்பெரியவரவேற்பு கிடைக்கும் என்றும் அதிக வசூல் பார்க்கலாம் என்றும் அங்குள்ள விநியோகஸ்தர்கள் ஆலோசனை தெரிவித்து உள்ளனர்.

சமீபத்தில் வெளியான ரஜினியின் ஜெயிலர் படத்தில் சிவராஜ்குமார் சிறிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். அவருக்காகவே கர்நாடகாவில் ஜெயிலர் படத்தை ரசிகர்கள் தியேட்டர்களில் சிவராஜ்குமார் கட்அவுட் வைத்து கூட்டம் கூட்டமாக வந்து பார்த்தனர். அதேமாதிரி கேப்டன் மில்லர் படத்தையும் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் கன்னட மொழியிலும்வெளியிடமுடிவுசெய்துள்ளனர்.இந்தபடத்தை அருண் மாதேஸ்வரன் டைரக்டு செய்துள்ளார். பிரியங்கா, சந்தீப் கிஷன், நிவேதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.




# தமிழில் வரும் அமிதாப்பச்சன் படம்



அமிதாப்பச்சன் இந்தியில் நடித்துள்ள 'கண்பத்' படமும் தமிழில் வருகிறது.

இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் வெளியாகும் படங்களை தமிழிலும் வெளியிட அங்குள்ள திரையுலகினர் ஆர்வம் காட்டுகின்றனர். ஏற்கனவே அதிக பிறமொழி படங்கள் தமிழில் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளன.

இந்த வரிசையில் அமிதாப்பச்சன் இந்தியில் நடித்துள்ள 'கண்பத்' படமும் தமிழில் வருகிறது. இது தவிர கன்னடம், தெலுங்கு, மலையாள மொழிகளிலும் இந்தப்படம் வெளியாக இருக்கிறது. இதில் டைகர் ஷராப், கீர்த்தி சனோன் ஆகியோரும் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஏற்கனவே ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்புக்குரிய படமாக இருக்கும்கண்பத்படத்தின்டிரெய்லர் வெளியாகி வரவேற்பை பெற்றுள்ளது. இந்தப்படத்தை விகாஸ் பாஹல் டைரக்டு செய்துள்ளார்.

ரஜினிகாந்தின் 170வது படத்திலும் அமிதாப்பச்சன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இது அமிதாப்பச்சன் நடிக்கும் முதல் நேரடி தமிழ் படம் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் படப்பிடிப்பில் விரைவில் அவர் இணைய இருக்கிறார்.

# தீபாவளிக்கு வரும் 3 படங்கள்





இந்த வருடம் தீபாவளி பண்டிகையில் கார்த்தியின் ஜப்பான், லாரன்சின் ஜிகர்தண்டா 2 , விக்ரம் பிரபுவின் ரெய்டு ஆகிய 3 படங்கள் தீபாவளிக்கு மோத தயாராகி உள்ளது.

இந்த வருடம் தீபாவளி பண்டிகையில் கார்த்தியின் ஜப்பான், லாரன்சின் ஜிகர்தண்டா2ஆகியபடங்கள் வெளியாகும்என்றுஅறிவித்து இருந்தனர். தற்போது விக்ரம் பிரபுவின் ரெய்டு படமும் போட்டியில் இணைகிறது. இதன் மூலம் தீபாவளிக்கு 3 படங்கள் மோத தயாராகி உள்ளது.

ஜப்பான் படத்தை ராஜுமுருகன் இயக்கி உள்ளார். இவர் தேசிய விருது பெற்ற ஜோக்கர் படத்தை இயக்கி பிரபலமானவர். இது கார்த்திக்கு 25வது படம் ஆகும். நாயகியாக அனு இம்மானுவேல் நடித்துள்ளார்.

சித்தார்த் நடித்த ஜிகர்தண்டா படத்தின் இரண்டாம் பாகமாக ஜிகர்தண்டா 2 உருவாகி உள்ளது. இதில் லாரன்சுக்கு வில்லனாக எஸ்.ஜே.சூர்யா நடித்துள்ளார் கார்த்திக் சுப்புராஜ் இயக்கி உள்ளார். இந்தப்படம் அதிரடி சண்டை படமாக உருவாகி உள்ளது.

விக்ரம் பிரபுவின் 'ரெய்டு' படம் கன்னடத்தில் சிவராஜ்குமார் நடிப்பில் உருவான 'தகறு' என்ற படத்தின் தமிழ் ரீமேக்காக தயாராகி உள்ளது. இந்தப்படத்தில் ஸ்ரீதிவ்யா, அனந்திகா, ரிஷி ரித்விக், சவுந்தர்ராஜா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். கார்த்தி இயக்கி உள்ளார்.

ஏற்கனவே தீபாவளிக்கு வெளியாக இருந்த சிவகார்த்திகேயனின் அயலான் படத்தை பொங்கல் பண்டிகைக்கு தள்ளி வைத்து விட்டனர். இதுபோல் தீபாவளிக்கு வரும் என்று எதிர்பார்த்த விக்ரமின் துருவ நட்சத்திரம் படம் நவம்பர் இறுதிக்கு போகிறது.

# ராமாயணம் படத்தில் சீதையாக நடிக்கும் சாய்பல்லவி நெகிழ்ச்சி



3டி தொழில்நுட்பத்தில் இன்னொரு ராமாயண படம் 3 பாகங்களாக தயாராக உள்ளது. இதில் ராமராக ரன்பீர் கபூரும் சீதையாக சாய்பல்லவியும் நடிக்கின்றனர்.

ராமாயணம் கதையை மையமாக வைத்து ஏற்கனவே ஸ்ரீ ராமராஜ்ஜியம், ஆதிபுருஷ் உள்ளிட்ட பல படங்கள் வந்துள்ளன. தற்போது தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் 3டி தொழில்நுட்பத்தில் இன்னொரு ராமாயண படம் 3 பாகங்களாக தயாராக உள்ளது. இந்தப்படத்தை நித்திஷ் திவாரி டைரக்டு செய்கிறார். இதில் ராமராக ரன்பீர் கபூரும் சீதையாக சாய்பல்லவியும் நடிக்கின்றனர்.

சீதையாக நடிப்பது குறித்து சாய்பல்லவி நெகிழ்ச்சியோடு கூறும்போது, "இயக்குனர் நித்திஷ் திவாரி எனக்குள் சீதையை எப்படி பார்த்தார் என்ற உணர்வு மகிழ்ச்சியை தருகிறது. இது நிஜமாகவே அரிதாகக் கிடைக்கும் அதிர்ஷ்டம். படப்பிடிப்புக்கு எப்போது அழைப்பார்கள் என்று ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

இது ஒரு சவாலான வேடம். புகழ்பெற்ற நடிகைகள் நடித்த கதாபாத்திரம் இது. அவர்கள் நடித்ததில் 10 சதவீதம் நடித்தாலும் நன்றாக செய்த மாதிரிதான். விரைவில் கதையை கேட்க மும்பை செல்கிறேன். ஏற்கனவே இந்திய சினிமாவில் பல ராமாயண படங்கள் வந்துள்ளன. ஆனால் வால்மீகி ராமாயணத்தை யாரும் பரிபூரணமாக காட்டவில்லை. இந்தப்படம் அந்த குறையை தீர்க்கும்'' என்றார்.




# சென்னையில் நடைபெறும் 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து: வருமான வரி அணி வெற்றி

சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து போட்டி எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது.

இதில் 5வது நாளான நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் டி.ஜி.வைஷ்ணவா அணி 2522, 2517, 2519 என்ற நேர்செட்டில் ஐ.சி.எப்.பை தோற்கடித்தது. மற்றொரு ஆட்டத்தில் வருமான வரி அணி 2521, 1625, 3220, 2325, 1511 என்ற செட் கணக்கில் இந்தியன் வங்கியை வீழ்த்தியது.

# எகிப்தில் நடக்கும் உலக கேடட் செஸ் சாம்பியன்ஷிப்பில் இருந்து இந்தியா விலகல்



எகிப்தில் நடக்கும் உலக கேடட் செஸ் சாம்பியன்ஷிப்பில் இருந்து விலகுவதாக அகில இந்திய செஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உலக கேடட் செஸ் சாம்பியன்ஷிப் போட்டி எகிப்தின் ஷார்ம் எல் ஷேக் நகரில் இன்று முதல் 23ந்தேதி வரை நடக்க உள்ளது. இதில் இந்தியாவில் இருந்து 8, 10, 12 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் 39 வீரர்கள் கலந்து கொள்வதாக இருந்தது.

ஆனால் இந்த போட்டி நடக்கும் நகரம் இஸ்ரேல் எல்லையில் இருந்து 400 கிலோமீட்டர் தூரத்துக்குள் அமைந்துள்ளது. இஸ்ரேல்ஹமாஸ் இடையே போர் நடந்து கொண்டிருப்பதால், பாதுகாப்பு கருதி இந்த போட்டியில் இருந்து இந்தியா விலகியது. இந்த தகவலை அகில இந்திய செஸ் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# நியூசிலாந்துக்கு வந்த புதிய சிக்கல்...வில்லியம்சனுக்கு எலும்பு முறிவு வெளியான புதிய தகவல்...!



10 அணிகள் கலந்து கொண்டுள்ள 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் கலந்து கொண்டுள்ள நியூசிலாந்து அணி இதுவரை 3 லீக் ஆட்டங்களில் ஆடி அனைத்திலும் வெற்றி பெற்று புள்ளிப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

நியூசிலாந்து அணி நேற்று சென்னையில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் வங்காளதேசத்தை வீழ்த்தி ஹாட்ரிக் வெற்றியை பதிவு செய்தது. காயம் காரணமாக முதல் இரு லீக் ஆட்டங்களில் ஆடாத கேன் வில்லியம்சன் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் விளையாடி அரைசதம் அடித்து அசத்தினார். அவர் 78 ரன் எடுத்த நிலையில் இடது கையின் கட்டை விரலில் காயம் ஏற்பட்டதால் ரிட்டையர் ஹர்ட்ஆகி வெளியேறினார்.

இந்நிலையில் வில்லியம்சனுக்கு இடது கையின் கட்டை விரலில் எலும்பு ஏற்பட்டுள்ளதாகவும், அவர் உலகக்கோப்பை தொடரின் லீக் ஆட்டங்களில் கலந்து கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஒருவேளை காயம் காரணமாக வில்லியம்சன் தொடரில் இருந்து வெளியேறினால் அவருக்கு பதிலாக டாம் ப்ளண்டெல் அணியில் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

# மைதானத்தில் இருந்து கோலி வெளியேறிய காரணம்?



உலகக்கோப்பை தொடரில் நடைபெற்று வரும் லீக் ஆட்டத்தில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் ஆடி வருகின்றன. இந்த ஆட்டத்துக்கான டாசில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் ஆடி வரும் பாகிஸ்தான் அணி 33 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 166 ரன்கள் எடுத்துள்ளது.

இந்நிலையில் இந்த ஆட்டத்தின் முதல் ஓவரில் பீல்டிங்குக்கு வந்த விராட் கோலி ஆறாவது ஓவரின் போது பதற்றம் அடைந்தார். அப்போது தன் ஜெர்சியை காட்டி, சைகையில் வெளியே அறையில் இருக்கும் சக இந்திய வீரர்கள் மற்றும் குழுவினரிடம் ஏதோ சொல்ல முயன்றார்.

பின் அதே ஓவரில் இஷான் கிஷன் கோலிக்கு மாற்றாக பீல்டிங் செய்ய வந்தார். கோலி ஏன் வெளியே சென்றார் என ரசிகர்களிடையே பெரும் கேள்வி எழுந்தது. இந்நிலையில் அதற்கு தற்போது பதில் கிடைத்துள்ளது. உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியின் ஜெர்சியில் தோள்பட்டை பகுதியில் மூன்று பட்டை உள்ளது.

உலகக்கோப்பை தொடருக்கு முன்பு மூன்று வெள்ளை பட்டைகள் இருந்த இடத்தில் உலகக்கோப்பை தொடருக்காக இந்திய தேசிய கொடியின் மூவர்ண நிறம் அந்த பட்டைகளில் இடம் பெற்று இருக்கிறது. விராட் கோலி, பாகிஸ்தான் போட்டிக்கு களமிறங்கும் போது தவறுதலாக மூன்று வெள்ளை பட்டை கொண்ட சட்டையை அணிந்து வந்து விட்டார்.

அதை ஆறாவது ஓவரின் போதே விராட் கோலி கவனித்து இருக்கிறார். உடனே அறைக்கு சென்று அந்த ஜெர்சியை மாற்றிவிட்டு உலகக்கோப்பை தொடருக்கான ஜெர்சியை அணிந்து கொண்டு வந்தார். இதை அறிந்த பின்னரே ரசிகர்களின் குழப்பம் நீங்கியது.

# ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன்: அரையிறுதிக்கு முன்னேறிய பி.வி.சிந்து



ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து அரையிறுதிக்கு முன்னேறினார்.

பின்லாந்தில் ஆர்க்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டி நடைபெறுகிறது. இந்த போட்டியின் முடிவுகள் பாரிசில் அடுத்த அண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான தரவரிசையில் கணக்கிடப்படும். இதனால் இப்போட்டியில் வீரர், வீராங்கனைகள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவருகின்றனர்.

அவ்வகையில்மகளிர்ஒற்றையர்பிரிவில்இந்தியாவின் நட்சத்திரவீராங்கனைபி.வி.சிந்து தொடர்ந்து முன்னேறி வருகிறார். இன்று நடந்த காலிறுதி ஆட்டத்தில் வியட்நாம் வீராங்கனை துய் லின் நுயெனை எதிர்கொண்ட பி.வி.சிந்து, 2022, 2220, 2118 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆர்க்டிக் பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்ற இந்திய வீரர், வீராங்கனைகளில் பி.வி.சிந்து மட்டுமே அரையிறுதி வரை முன்னேறியிருக்கிறார். மற்றவர்கள் முந்தைய சுற்றுகளில் தோல்வியடைந்து வெளியேறினர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.